முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved]


கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education, Ministry of Education, Ministry of Education

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2023(2024)**

*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

தமிழ் மொழியும் இலக்கியமும் **I, II**
**Tamil language and literature I, II**

**22 T I,II**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- வினாத்தாள் 1 ற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

சுட்டெண் : ....................................

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. ‘பரிதியொளி வீசி எழும் பரவசமாம்’ இங்கு **பரிதி** என்பது

   1. வட்டம் 2. விசிறி 3. திங்கள் 4. சூரியன்

2. ‘ஈமஞ்சேர் மாலை போல் இழிந்திடப்பட்ட செயலாகும்’ இங்கு **ஈமம்** என்பது

   1. பிணம் 2. வானம் 3. கழுத்து 4. நிகழ்வு

3. ‘எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்’ இங்கு **கனல்** என்பதன் எதிர்ப்பதம்

   1. தழல் 2. புனல் 3. அனல் 4. நிழல்

4. ‘நங்கை நிலைக்கேற்க நடக்கவலனோ’ இங்கு **நங்கை** என்பதன் எதிர்ப்பாற் சொல்

   1. தம்பி 2. நண்பன் 3. நம்பி 4. நங்கன்

5. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ இங்கு **கேளிர்** என்பது

   1. உறவினர் 2. கேளுங்கள் 3. கூறுங்கள் 4. நல்லவர்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பின்வருவனவற்றுள் தொடர்பற்ற சொற்களின் இணைப்பு

   1. நாய் - உறுமும் 2. வண்டு - இரையும்
   3. தேவாங்கு – அழும் 4. குரங்கு – அலப்பும்

7. ஒரே பொருளைக் கொண்ட சொற்களின் தொகுதி

   1. சீயம், துரகம், அசுவம் 2. உதிரம், கறை, உறை
   3. மகவு, மழலை, சிசு 4. இழை, தழை, பனுவல்

8. மாடு, தனம், திரு என்னும் சொற்கள் குறிக்கும் பொருள்

   1. மிருகம் 2. பக்கம் 3. செல்வம் 4. சிறப்பு

9. ‘சிட்டிசன்சிப்’ **(Citizenship)** என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்

   1. வாக்குரிமை 2. பிரஜாவுரிமை 3. சொத்துரிமை 4. மரபுரிமை

10. ‘நண்பர் தனக்குத் தெரிந்த மந்திர வித்தையெல்லாம் செய்து பார்த்தார். குழையடிப்பது ஒன்று தான் பாக்கி’ இங்கு **குழையடிப்பது** என்பது

1. ஒதுக்குதல் 2. ஏற்றுக்கொள்ளல் 3. தன்வசப்படுத்தல் 4. வற்புறுத்தல்

11. ‘ஒருவருக்கு தமது சுற்றத்தார் செய்யும் தவறுகள் தெரிவதில்லை எனும் பொருளை உணர்த்தும் பழமொழி

1. தன்னுயிர் போல் மன்னுயிரையும் நினை 2. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரிவதில்லை
3. நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி 4. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை

12. ‘மனம் கொண்டதே மாளிகை’ எனும் பழமொழிக்கு ஒத்த பழமொழி

1. கனிந்த பழம் தானே விழும்
2. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
3. ஆக்கப் பொறுத்தவன் ஆற பொறுக்க வேண்டும்
4. இனம் இனத்தைச் சேரும்

13. ‘இகபர இன்பம்’ எனும் அருஞ்சொற்றொடர் எந்நிலைகளிலான இன்பமடைதலைக் குறிக்கிறது?

1. பிறப்பிலும் வாழ்விலும் 2. வெற்றியிலும் தோல்வியிலும்
3. இம்மையிலும் மறுமையிலும் 4. நன்மையிலும் தீமையிலும்

14. ‘கோழிக் கூட்டினுள் சலசலப்பு கேட்டது’ இங்கு **சலசல** என்பது

1. இணைமொழி 2. அடுக்குத்தொடர்
3. அடுக்கிடுக்குத்தொடர் 4. இரட்டைக்கிளவி

15. ‘எந்த ஒரு செயலை செய்யும் போதும் அதற்கேற்ற முறையில் வகைப்படுத்திச் செய்ய வேண்டும்’ எனும் கருத்தை உணர்த்தும் உவமைத்தொடர்

1. புதிதாய் பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றியது போல
2. புகையிலை கன்றுக்கு பாத்தி கட்டியது போல
3. சந்திப்பிரிக்காத பாடல் போல
4. சம வயது குழுவினர் போல

16. அமுத விழா எத்தனையாம் ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும்

1. நூறு 2. எண்பது 3. எழுபத்தைந்து 4. அறுபது

17. “மாமரத்தின் பூக்கள் காற்றுக்கு உதிர்ந்து கூரைக்கு மேல் நச்சென விழுந்தன” இங்கு இடம்பெறும் ஒலிக் குறிப்புச் சொல்

1. பூக்கள் 2. விழுந்தன 3. நச்சென 4. உதிர்ந்து

18. பஞ்சமா பாதகங்களுள் **அடங்காதது**

1. ஆசை 2. கொலை 3. களவு 4. காமம்

19. ‘கந்தன் வீதியில் நடையனோடு போனான்’ இங்கு **நடையன்** என்பது எச்சமூகக் கிளைமொழியாகும்?

1. மீன்பிடி 2. வணிகம் 3. விவசாயம் 4. மருத்துவம்

20. ‘அச்சாறு’ என்பது எம்மொழிச்சொல்?

1. ஒல்லாந்து 2. போர்த்துக்கேயம் 3. மராட்டி 4. அரபு

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருனவற்றுள் சகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. சனம் 2. பாசம் 3. தசம் 4. மஞ்சு

22. ‘நாட்டிற்கு’ எனும் சொல்லில் இடம்பெற்றுள்ள சாரியை யாது?

1. இல் 2. இன் 3. ன் 4. கு

23. ‘அப்பாவிடம் பணம் இருக்கிறது’ இங்கு எத்தனையாம் வேற்றுமை இடம்பெற்றுள்ளது?

1. மூன்று 2. ஐந்து 3. ஏழு 4. எட்டு

24. ‘மக்களால்’ என்பதில் இடம்பெற்றுள்ள புணர்ச்சி

1. கெடுதல் 2. திரிதல் 3. தோன்றல் 4. இயல்பு

25. பின்வருவனவற்றுள் உவமைத்தொகையாக அமைவது

1. கஞ்சமுகம் 2. உயிர்மெய் 3. மரஅணில் 4. செவ்வானம்

26. அவன் காலையில் தேநீர் குடிப்பான்

அவன் காலையில் பால் குடிப்பான்

மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்கரீதியாக இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்

1. ஆகையால் 2. ஆனால் 3. அல்லது 4. எனினும்

27. பின்வருவனவற்றுள் தெரிநிலை வினையாக அமைவது

1. சிரிப்பவன் 2. சிரித்தல் 3. சிரிப்பு 4. சிரிப்பான்

28. அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி

1. பாடல், புகழ், பொறுமை, பணம்
2. மாணவன், மீனவன், மையல், மௌவல்
3. சுகம், சூழல், சேணம், சைவம்
4. நமது, நாணம், நீளம், நேசம்

- **பொருத்தமற்ற உதாரணங்கள் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க**

29.
1. பெயர்ச்சொல் - அகிலம், நகுலம், விமலம்,
2. வினைச்சொல் - படித்தான், படிப்பித்தான், நல்லன்
3. இடைச்சொல் - அம்ம, மற்று, பிற
4. உரிச்சொல் - சால, போல, உறு

30.
1. போலி - அய்யர், பந்தர், அமச்சு
2. வினா - அவனா, எதுவோ, வருவாயா
3. சுட்டு - அவன், இவன், எவன்
4. பகாப்பதம் - இலங்கை, சலங்கை, விலங்கு

- **புள்ளிக்கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. தரம் ஒன்று மாணவர்களுக்கான ………………………… விழா நடைபெற்றது

1. கடதாசி 2. பருத்தி 3. கால்கோள் 4. ஜயந்தி

32. பேச்சாளர் தனது கருத்தை நிறுவுவதற்கு இலக்கியங்களிலிருந்து ……………………… காட்டிப் பேசினார்

1. மேற்கோள் 2. செய்யுள் 3. கட்டுரை 4. உவமை

33. ‘அறம் வெற்றி பெறும்’ என பாண்டவர்களிடத்தே பாஞ்சாலி………………………… செய்தாள்.

1. விதப்புரை 2. சூளுரை 3. பரிந்துரை 4. சிபாரிசு

34. விசாரணைக்கு சமுகமளிக்காத குற்றவாளிக்கு நீதிபதியால் ………………………… பிறப்பிக்கப்பட்டது

1. அழைப்பாணை 2. கோரிக்கை 3. கட்டளை 4. பிடியாணை

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35. நூலகத்திலுள்ள ஒவ்வொரு புத்தகமும் பாதுகாக்கப்பட வேண்டியது ..............................

    1. அவசியமாகும்　　2. அவசியமானவை
    3. அவசியமாகா　　4. அவசியப்படா

36. மாணவர்களின் வினா விடைகளுடன் கூடிய அடைவுகள் இதுவரை காலமும் ஆசிரியரால் ..................

    1. கோவைப்படுத்தப்பட்டது　　2. கோவைப்படுத்தினார்கள்
    3. கோவைப்படுத்தினர்　　4. கோவைப்படுத்தப்பட்டன

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மூடிக்கவியும் இருட்பகை நீங்கும் இம்
மூதுலகைத்
தேடிக் கதிரும் உதிக்கும் கமலஞ்
சிரிக்கும் எனக்
கூடிக் குவியு மலருறை வண்டுளங்
கொண்டமைய
ஆடிக்குடைந்து மதவேழம் ஓடை
யழித்ததுவே

37. இப்பாடலில் விபரிக்கப்படும் பிரதான விடயம்

    1. இருண்ட தன்மை கொண்ட இருள் நீங்கும்
    2. பழமையான உலகை நோக்கிக் கதிரவன் வருவான்
    3. சூரியனைக் கண்டு தாமரை மலரும்
    4. யானை இடங்களை சிதைத்தல்

38. 'கூடிக்குவியும் மலருறை வண்டு' என்ற தொடரால் உணர்த்தப்படுவது

    1. வண்டுகளின் மகிழ்ச்சி
    2. தாமரை மலர்ந்து விட்டது
    3. யானைகள் தம்மைத் தாக்க வருமென வண்டு கருதுதல்
    4. வண்டுகள் எப்போதும் கூடியே வாழும்

39. இங்கு உருவகப்படுத்தப்பட்ட தொடர் இடம்பெறுவது

    1. ஆடிக்குடைந்து மதவேழம்　　2. தேடிக் கதிரும் உதிக்கும்
    3. கூடிக் குவியு மலருறை　　4. மூடிக்கவியும் இருட்பகை

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. அத்துடன் திருவாவடுதுறையிலும் பல பணிகளை ஆற்றினார்.

ஆ. நாவலர் பெருமான் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தார்.

இ. சென்னையில் அச்சியந்திரசாலையை நிறுவி நூல்களை அச்சிட்டார்

ஈ. இவரது தமிழ்ப்பணி இலங்கையில் மட்டுமல்லாது தமிழ்நாட்டிலும் பரவியிருந்தது.

உ. இவரது பணிகளைக் கௌரவிக்கும் வகையில் திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற பட்டத்தை வழங்கியது

    1. ஆ, ஈ, இ, அ, உ　　2. ஆ, இ, ஈ, அ, உ
    3. இ, அ, ஈ, உ, ஆ　　4. உ, அ, ஆ, இ, ஈ

**கல்வி அமைச்சு**

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education Ministry of Education

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2023(2024)**

தமிழ் மொழியும் இலக்கியமும் **II**
**Tamil language and literature II**

**22 T II**

**கவனிக்குக.**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- ❖ இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**01) சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   ‘தோன்றறுயர்க் கடலினேக’

2. ‘திரைப்படப்பாடல்களையும் இலக்கியமாக மதித்தாக வேண்டிய நிலையைக் கண்ணதாசன் உண்டாக்கியிருக்கின்றார்’ இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

3. பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தக்குறிகளுடன் எழுதுக.
   விட்டிர்ராதே விட்டிர்ராதே பிடி என்று கத்தினேன்

4. பின்வரும் வாக்கியத்தில் உள்ள தலைமைத் தொடரையும் சார்புத் தொடரையும் இனங்கண்டு எழுதுக.
   இயேசுபிரான் குழந்தைகள் போன்றவர்களே இறைவனடிக்குத் தகுதியுடையவர்கள் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.

5. **‘கரை’** என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

6. நீ என்னுடன் தேவாலயத்திற்கு வருகிறாயா?
   நீ என்னுடன் தேவாலயத்திற்கு வரவில்லையா?
   மேற்படி இரண்டு வாக்கியங்களையும் ஒரு வாக்கியமாக்கி எழுதுக.

7. பின்வரும் வாக்கியத்தில் காணப்பெறும் ஆக்கப்பெயடை யாது?
   ‘பெரிய மாமரத்தில் உள்ள இனிமையான மாம்பழங்களை குரங்குகள் பந்தாடின’

8. பின்வரும் தொழின்முறைக் கடிதமொன்றின் உறுப்புக்களை ஒழுங்குபடுத்தி எழுதுக
   உள்முகவரி, ஒப்பம், விளிப்பு, உடல், முகவரி, முடிப்பு, தலைப்பு

9. ‘வான்மீகி இராமயணத்தை வைத்து கம்பரால் தமிழில் கம்பராமாயணம் உருவாக்கப்பட்டது’ மேலே தரப்பட்டுள்ள செயப்பாட்டுவினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

10. “துறைபோதல்” என்ற மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது?

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**02.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250 சொற்களில்** அமையுமாறு விடை எழுதுக. தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i). இருபத்தோராம் நூற்றாண்டிலே மனிதன் பல்வேறுபட்ட விஞ்ஞான வளர்ச்சிகளைத் தாண்டிவிட்டான். அந்தவகையில் பூமியிலுள்ள விடயங்களை ஆய்வு செய்தவன் வேற்றுக்கிரகங்களை ஆய்வுசெய்யத் தொடங்கியுள்ளான். விண்வெளி ஆய்வுகள் உச்சநிலையை அடைந்துள்ளன. இதனை உள்ளடக்கி ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii). ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்களின் பங்களிப்பு அளப்பரியது. தற்காலத்தில் எமது நாடானது அபிவிருத்தியடைந்து வருகின்ற போதிலும் இன்றைய இளைய சந்ததியினர் இடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவது நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு போதைப்பொருள் ஒழிப்பு தினத்தில் நீர் நிகழ்த்தும் **மேடைப்பேச்சு**

(iii). நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக பயிற்றப்பட்ட ஊழியப்படையானது அதிக வருவாயை ஈட்டும் முகமாக வெளிநாடுகளை நோக்கி புலம்பெயர்ந்து செல்கின்றது. இதனால் ஏற்படுகின்ற சாதக பாதக விடயங்களை உள்ளடக்கிய வகையில் இருவருக்கிடையிலான **உரையாடல்.**

(iv). தன்னுடன் படித்தவர்கள் எல்லாம் ஏதோ ஒரு வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் சுகுணனால் எந்த வேலைக்கும் செல்ல முடியவில்லை. படிக்கும் காலத்தில் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போய் படித்திருந்தால்…. அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வைத்தவா… அம்மா சொன்ன கதையெல்லாம் கேட்காமல் சுத்தித் திரிந்தது தான் இதுக்கெல்லாம் காரணம். கூடாத நபர்களின் பழக்கங்களால் ஏற்பட்ட அந்த பாதிப்பு என்னை நிரந்தர ஊனமாக்கி விட்டது. அம்மாவின் சொல்லுக்கேட்டிருந்தால் நானும் நல்லா இருந்திருப்பனே... என்று தொடரும் வகையில் அமைந்த **சிறுகதை**.

**(25 புள்ளிகள்)**

**03.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

பண்பாடு என்பது பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல். கலாசாரம் என்ற சொல்லும் பண்பாட்டுக்கு ஒத்தசொல்லாக பயன்படுகின்றது. பண்பாடு என்பது மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயற்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்து வத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் குறிக்கின்றது.

பண்பாடு என்பது மனித இயல்பு என்றும், அது அனுபவங்களைப் பகுத்து குறீயீடாக்கி, குறியீட்டு முறையில் வெளிப்படுத்துவதற்கான உலகம் தழுவிய மனிதனுடைய தகுதியை மூலவேராகக் கொண்டது எனவும் பிரான்ஸ் போவாஸ் கூறுவார். புனைவியக் காலத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த அறிஞர்கள், பண்பாட்டுக்கு விளக்கமளிப்பதைக் காணலாம். சிறப்பாகத் தேசியவாத இயக்கங்களோடு தொடர்புடையவர்கள் பண்பாடு என்பது உலகப்பார்வை என்னும் எண்ணக்கருத்து ஒன்றை உருவாக்கினர். பெறுமானம் (எண்ணங்கள்), நெறிமுறைகள் (நடத்தை), மற்றும் பொருட்கள் (பொருள்சார் பண்பாடு) எனப்படும் பொதுவான மூன்று மூலகங்கள் வாயிலாக பண்பாட்டை விளங்கிக்கொள்ளலாம் என்கின்றனர்.

வாழ்வில் முக்கியமானது எது என்பது பற்றிய எண்ணங்களே பெறுமானங்களாகும். நெறிமுறைகள் என்பன, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆகும். பண்பாடு பல்வேறு கூறுகளை கொண்டிருப்பதை காணமுடிகிறது.மனிதனது நடை, உடை, பாவனை, பழக்க வழக்கம், போன்றதான கூறுகளாக அவை காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் தமது பண்பாட்டை அறிந்து ஒழுக வேண்டியது கடமையாகின்றது.

**(10 புள்ளிகள்)**

**04.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சங்கமருவியகால மக்கள் தன்னிச்சையாக வாழ முற்பட்டனர். அதனால் அம்மக்களுக்கு அறம் உரைத்து அவர்களை நெறிப்படுத்த வேண்டிய தேவை எழுந்தது. அக்காலத்தில் அறக்கருத்துக்களை பிரச்சாரப்படுத்த சமண, பௌத்த சமயங்கள் முன்னிலைக்கு வந்தன. இக்காரணங்களால் சங்கமருவிய கால இலக்கியங்களின் பிரதான பாடுபொருளாக அறம் அமைந்திருந்தது போலவே திருக்குறளினதும் பிரதான பாடுபொருளாக அறமே அமைந்தது.

சங்கமருவியகால ஆரம்பத்திலேயே அரசு எனும் நிறுவனம் தமிழ் நாட்டில் தோற்றம் பெற்றதாக நம்பப்படுகிறது. எனவே, அந்த நிறுவனத்தின் செயற்பாட்டிற்குத் தேவையான விடயங்களை முன்னிறுத்திச் செல்ல வேண்டிய தேவையும் எழுந்தது. அத்தேவையின் விளைவாகவே திருவள்ளுவர் திருக்குறளின் பொருளதிகாரத்தை அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல் போன்ற பகுதிகளை அமைத்தார் எனலாம். அறக்கருத்துக்களைத் தேவையற்ற வர்ணனைகளோ, தேவையற்ற விபரித்தல்களோ இன்றி தெளிவாகவும் நேரடியாகவும் கூறுவதற்கு அகவற்பா போன்றவற்றை விட கட்டிறுக்கமும் செப்பலோசையும் உடைய வெண்பா பொருத்தமாக இருந்தமையால் சங்கமருவிய காலத்தில் அது பெறுவழக்காயிற்று. திருக்குறளும் வெண்பாவையே பயன்படுத்தியது. அத்தோடு விடயங்களைத் தொடர்ச்சியாகக் கூறி வலியுறுத்த விரும்பி தொடர்நிலையில் பத்துப்பத்து குறள்களாக அதிகாரங்களை வகுத்து திருக்குறளைப் படைத்தார்.

1. தன்னிச்சையாக வாழ்ந்த சங்கமருவிய கால மக்களுக்கு தேவையாக இருந்தது யாது?
2. தமிழ்நாட்டில், சங்கமருவியகால ஆரம்பத்திலேயே தோற்றம் பெற்ற நிறுவனம் எது?
3. திருக்குறளின் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள பகுதிகள் எவை?
4. சங்கமருவியகாலத்தில் வெண்பா யாப்பு பெருவழக்காயிருந்தமைக்கான காரணத்தை தருக?
5. திருக்குறளில் அதிகாரங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?

**(10 புள்ளிகள்)**

05. எமது நாட்டில் தற்போது உள்ளூர் விவசாய உற்பத்தி குறைவடைந்து மரக்கறிகளின் விலையேற்றம் அதிகரித்துள்ளது. இதனால் எமது நாடு எதிர்காலத்தில் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக நேரிடும். இதனைக் கருத்திற்கொண்டு உள்ளூர் விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பூங்காவன கிராமத்தின் கிராம அபிவிருத்திச்சங்கச் செயலாளர் த.அருணாசலம் என உம்மைக் கருதிக்கொண்டு விவசாயத் திணைக்கள பணிப்பாளருக்கு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

- உள்ளூர் விவசாய உற்பத்தி குறைவடைவதற்கான காரணம்
- அதனால் ஏற்படவுள்ள பாதிப்புக்கள்
- உள்ளூர் விவசாய உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

**அல்லது**

இன்றைய காலகட்டத்தில் வெப்பநிலையானது அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிக வெயிலில் நடமாடுவதனால் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாக நேரிடுவதால் மக்கள் அனைவரையும் அவதானமாக இருக்கக்கோரி பின்வரும் விடயங்கள் உள்ளடங்குவதாக துறையூர் இளைஞர் மன்றத்தின் சார்பில் 100 சொற்களில் ஒரு விழிப்புணர்வு **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

- அதிகமாக பாதிக்கப்படுவோர்.
- பாதகமான விளைவுகள்
- பாதுகாப்பு வழிகள்.

**(15 புள்ளிகள்)**

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministr

**கல்வி அமைச்சு**

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)

**General Certificate of Education (Ord. Level) Examination - 2023(2024)**

*இரண்டு மணித்தியாலம்*
***Two hours***

தமிழ் மொழியும் இலக்கியமும் III
**Tamil language and literature III**

**22 T III**

**அறிவுறுத்தல்கள் :**

- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை தருக.**

(i) “..ஆர்தட் டினும்தட்டு வராமலே அன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே..”
(அ) தட்டு வராமலே என்பது குறிக்கும் கருத்து யாது?
(ஆ) வரோதயன் என்பதன் பொருள் யாது?

(ii) “யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, அன்பால்
அன்பும் அருளும் அறனும் மூன்றும்”
(அ) மேலுள்ள கூற்று இடம்பெறும் இலக்கியம் யாது?
(ஆ) இச்செய்யுளின் ஊடாக வெளிப்படுத்தப்படும் தமிழ்ப் பண்பாடு யாது?

(iii) “நாடகத்தின் இந்த உடும்புப் பிடியில் இருக்கும் வரை ஆரோக்கியமான சினிமா
மலர வழியில்லாமல் போயிற்று”
(அ) ‘உடும்புப்பிடி’ என்றால் என்ன?
(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள கலைச்சொல் யாது?

(iv) “பறவைகளின் ஒலி ஓயாது. பாரி இருந்தால் பேச்சு கொடுத்திருப்பார்.. புறப்படுகின்றோம் பறம்பே...
(அ) இது யாருடைய கூற்றாக அமைகின்றது?
(ஆ) இங்கு வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?

(v) “..மூடுகின்ற இமைக்கடங்கா முழுநிலவு விழிகள்
முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம் பூக்கள்..”
(அ) நிலவு விழி என்பது எவ்வகையான அணி?
(ஆ) முந்தானையாக உருவகிக்கப்படுவது எதனை?

(vi) “அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதாம் வால்குழைக்கும் நாய்..”
(அ) அறிந்தறிந்தும் என்பதால் நீர் கருதுவது யாது?
(ஆ) வால்குழைக்கும் என்ற தொடரால் குறிப்பிடப்படுவது யாது?

(vii) “என்னிதய தாமரைக்கோ ரிலக்குமியாம் பெண்ணரசி
கன்னன்மொழி கேளாது கஞ்சமுக நோக்காது”
(அ) இதயத்தாமரை என்பது எவ்வகை அணி?
(ஆ) கன்னல் என்பதன் கருத்து யாது?

(viii) “அப்ப ஏன்கா நம்மட உம்மா மவுத்தாப் போன அன்டெக்கி இது கத்தல..”
(அ) இது எனக் குறிப்பிடப்படுவது யாது?
(ஆ) ‘மவுத்தாப் போன’ என்பதன் பொருள் யாது?

(ix) “..குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பர்
நிந்தநின்ற குரிசி லென்றான்..”
(அ) இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
(ஆ) இதில் குரிசில் எனப்படுபவர் யார்?

(x) “இத்துணை நீதி நூல்களை இயற்றிய மக்களுக்கு கடவுளின் சிறப்பாக அருள் இருத்தல் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.”
(அ) இவ்வாறு குறிப்பிட்டவர் யார்?
(ஆ) இதனூடாக வெளிப்படுத்தப்படும் தமிழ்ப்பண்பாடு யாது?

**(2 X 10 = 20 புள்ளிகள்)**

**2. பின்வரும் செய்யுட்பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(i) ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

(அ) இப்பாடலில் வெளிப்படும் சிலேடைகளைத் தருக.
(ஆ) பிண்ணாக்கு என்பதன் மூலமாக கூறப்படும் கருத்துக்களை விளக்குக.

(ii) பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்
பசிக்கூட்டம் விரட்டிவரும் பண்புமிகு ஈரம்
கனிக்கூட்டம் அசைந்தாடும் கனிமரத்தின் சோலை
கருமுகில்கள் தவழவரும் கார்கால மாலை
தனித்துநின்றும் சத்தியத்தால் தலைநிமிரும் மனிதன்
தற்பெருமை கொள்ளாது தலைத்தாழும் அறிஞன்
இனித்தாலும் கசந்தாலும் இன்முகத்தைக் காட்டும்
இல்லாளின் இயற்கையெழில் என்மனதை வெல்லும்

(அ) இயற்கை மீது கவிஞன் கொண்ட ஈடுபாடு யாது?
(ஆ) மனிதன், அறிஞன் பற்றி கூறப்பட்ட கருத்துக்களைத் தருக?

(iii) “……தண்கயமாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் திழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர் சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர் நணிப் படிகோ டேறிச் சீர் மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா விளமை…”

(அ) இப்பாடலில் கூறப்பட்டுள்ள இளமைப்பருவ செயற்பாடுகள் எவை?
(ஆ) ‘கல்லா விளமை’ என்பதனால் கருதப்படுவது யாது?

(iv) காட்சிப்படிமங்களின் மூலம் மட்டுமே பொறாமை, எரிச்சல், அதிருப்தி, பொறுமையின்மை எனும் மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளை ஹிட்சார்க் காட்டினார். காட்சிப்படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகின்றது என்கின்றார் ஹிட்சார்க். தமிழ் சினிமாவில் காட்சிப்படிமங்களால் கதை சொல்லும் முறை சரியாக வளரவில்லை. இது இந்தி சினிமாவுக்கும் பொருந்தும். பேசும் படம் பிறந்த நாளிலிருந்து, பேசும் பேச்சால் கதை சொல்லும் வழக்கம் வேரூன்றி, அது ஒரு பாரம்பரியமாகவே ஆகிவிட்டது. எப்படி? மௌனப் பட நாடகங்களில், புராணக் கதைகளே படமாக்கப்பட்டன; இவை மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த கதைகள்; ஆகவே காட்சிப்படிமங்கள் மூலம் கதையை உணர்த்த வேண்டிய அவசியம் இல்லாமல் போனது.

(அ) காட்சிப்படிமம் பற்றிய ஹிட்சார்க்கின் கருத்தினை விளக்குக.

(ஆ) காட்சிப்படிமங்கள் மூலம் கதையை உணர்த்த வேண்டிய அவசியம் இல்லாமல் போனது என்பதனால் கருதுவது யாது?

(v) அன்றிலிருந்து புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல கணிப்பொறி தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும், இன்னொரு பகுதியில் மனைவியும், மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம். எங்கள் படைப்புகளை இந்த வரப்புக்குள் வைத்துக் கொண்டோம். இதற்குப் பிறகு ஒரு ஒழுங்குமுறை வந்தது. ஆரம்பத்தில் எனக்கு கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஒரு இணக்கம் ஏற்பட்டது. அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத்தொடங்கியது. என்னுடைய வேலையை வெகு சுலபமாக்கியது. அந்த மாயா விநோதங்களில் நான் என்னுடைய மனதைப் பறிகொடுத்தேன்.

(அ) இப்பொழுது ஒரு ஒழுங்கு முறைக்குள் வந்தது என்பதால் கருதுவது யாது?

(ஆ) கம்பியூட்டருடன் பிணக்கு நீங்கி ஒரு இணக்கம் ஏற்பட்டது எனக் கூறக் காரணம் யாது?

**(4 X 5 = 20 புள்ளிகள்)**

3. **நாவலர் எழுந்தார்** எனும் கட்டுரையில்,
(அ) நாவலரின் தலைமைத்துவப் பண்பு
(ஆ) ஆசிரியர் சம்பவத்தை வெளிப்படுத்தப்படுத்தும் விதம்
என்பவற்றினை தெளிவுபடுத்துக.

**அல்லது**

**அற்றைத் திங்கள்** என்ற நாடகத்தில்,
(அ) மூவேந்தர்கள் தொடுத்த போரின் விளைவு
(ஆ) நாடகத்தில் ஆசிரியர் கையாண்ட உத்திகள்
என்பனவற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

4. **பேதைமை** எனும் அதிகாரத்தில்,
(அ) அறிவிலியின் பண்புகள்
(ஆ) அறிவிலியிடத்தே செல்வம் பெறுதலினால் ஏற்படும் விளைவு
என்பனவற்றை விளக்குக.

**அல்லது**

**தத்தைவிடு தூது** எனும் இலக்கியத்தில்,
(அ) பெண்கள் கல்வி கற்பதன் சிறப்பு
(ஆ) பெண் திருமணம்
என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றைத் தெளிவுபடுத்துக. **(15 புள்ளிகள்)**

**5,6,7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **நாட்டார் பாடல்** என்ற பகுதியில்,

   (அ) உழவனின் பரந்த மனப்பாங்கு

   (ஆ) இளந்தாரிமாரின் அறிவு வெட்டும் சிறப்பு

   என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

6. **கிருட்டிணன் தூது சருக்கத்தில்,**

   (அ) வீமனின் வீர ஆவேசமும்

   (ஆ) அதன் மூலம் வெளிப்படும் கண்ணனின் பெருமைகள்
   என்பவற்றைத் தெளிவுப்படுத்துக.

7. **தேயிலைத் தோட்டத்திலே** என்னும் கவிதையில்,

   அ. கவிஞனின் எதிர்பார்ப்பும்

   ஆ. தொழிலாளரின் அவலமும்
   வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக. **(10 புள்ளிகள்)**

*மாதிரி வினாத்தாள் - 2*

# புள்ளித்திட்டம்

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **4** | | 11 | **2** | | 21 | **4** | | 31 | **3** |
| 2 | **1** | | 12 | **2** | | 22 | **2** | | 32 | **1** |
| 3 | **2** | | 13 | **3** | | 23 | **3** | | 33 | **2** |
| 4 | **3** | | 14 | **4** | | 24 | **4** | | 34 | **4** |
| 5 | **1** | | 15 | **2** | | 25 | **1** | | 35 | **1** |
| 6 | **1** | | 16 | **2** | | 26 | **3** | | 36 | **4** |
| 7 | **3** | | 17 | **3** | | 27 | **4** | | 37 | **2** |
| 8 | **3** | | 18 | **1** | | 28 | **1** | | 38 | **1** |
| 9 | **2** | | 19 | **3** | | 29 | **4** | | 39 | **4** |
| 10 | **3** | | 20 | **2** | | 30 | **3** | | 40 | **1** |

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

01.

1. தோன்றல் + துயர் + கடலில் + ஏக
2. எழுவாய் - கண்ணதாசன்
   பயனிலை – உண்டாக்கியிருக்கிறார்
3. ‘‘விட்டிராதே! விட்டிராதே! பிடி’’ என்று கத்தினேன்.
4. தலைமைத் தொடர் - இயேசுபிரான் அறுதியிட்டுக் கூறுகின்றார்.
   சார்புத் தொடர் – குழந்தைகள் போன்றவர்களே இறைவனடிக்குத் தகுதியுடையவர்கள்.
5. பெயர் – கரை, வினை – கரைதல் பொருத்தமான வாக்கியங்கள்
6. நீ என்னுடன் தேவாலயத்துக்கு வருகிறாயா? வரவில்லையா?
7. ஆக்கப்பெயரடை - இனிமையான
8. முகவரி, உள்முகவரி, விளிப்பு, தலைப்பு, உடல், முடிப்பு ஒப்பம்
9. வான்மீகி இராமாயணத்தை வைத்து கம்பர் தமிழில் கம்பராமாயணத்தை உருவாக்கினார்.
10. நிரம்பக் கற்றல் / ஐயந்திரிபறக்கற்றல்

2. **புள்ளித்திட்டம்**

| | | |
|---|---|---|
| பொருளமைவும் அளவும் | - | 12 |
| கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | - | 06 |
| எழுத்து நுட்பங்கள் | - | 05 |
| தலையங்கம் | - | 02 |

**அ. விளக்கக் கட்டுரை**

**தலைப்புகள்** - விண்வெளிப்பயணமும் நாமும், விண்வெளியில் மனிதன் போன்றவை

- **அறிமுகம்**
  விண்வெளி ஆய்வு, ஆரம்ப கால விண்வெளிப் பயண முயற்சிகள், தற்போது விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் நாடுகள்
- **நன்மைகள்**
  தகவல் தொடர்பாடலின் வளர்ச்சி, செய்மதியூடாக தகவல் பரிமாற்றம், பிரபஞ்சத்தின் புதிய வளங்களை கண்டறிதல், விண்வெளியில் மனித வாழ்வு முயற்சிகள்

- **தீமைகள்**
  சூழல்மாசடைதல், நாடுகளுக்கிடையில் தகவல்தொழினுட்பப் போட்டி. அதிக செலவினம். விண்வெளிக் கழிவுகள்
- **முடிவுரை**

**ஆ. மேடைப் பேச்சு - மாதிரித் தலைப்புகள்**
போதைப்பொருள் பாவனையைத் தடுப்போம், போதை நாட்டுக்கு பெருங்கேடு

**போதைப்பொருள் பாவனையின் விளைவுகள்**
குடும்ப சீர்குலைவு, பொருளாதார பாதிப்பு, பாலியல் வன்கொடுமை, நோய்கள், பணத்துக்காக தீய செயல்களில் ஈடுபடல் (களவு, கொள்ளை, கடத்தல், கப்பம் கோரல்), மருத்துவ செலவின அதிகரிப்பு

**தடுப்பதற்கான வழிமுறைகள்**
விழிப்புணர்வு செயற்பாடுகள், பாடத்திட்டத்தில் இணைத்தல்
சட்டதிட்டங்களைச் முறையாக அமுல்படுத்தல், தண்டனைகளை அதிகரித்தல்

**முடிவுரை**

**இ. உரையாடல்**
**மாதிரித்தலைப்புகள்** - பொருளாதார நெருக்கடியும் மூளைசாலிகள் வெளியேற்றமும்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு நன்மையும் தீமையும்

**அறிமுகம்**
பயிற்றப்பட்ட ஊழியப்படை வெளியேறுவதற்கான காரணங்கள்

**ஊழியப்படை புலம்பெயர்வினால் ஏற்படுகின்ற நன்மைகள்**
அதிக வருமானம் பெறுதல், குடும்ப பொருளாதார அந்தஸ்து உயர்தல், நாட்டின் அந்நியச்செலவாணி அதிகரித்தல், புதிய கலாசாரத்தை பின்பற்றுதல், கல்வித்தகைமை அதிகரித்தல்

**தீமைகள்**
மூளைசாலிகள் வெளியேற்றம், உள்நாட்டு கைத்தொழில்கள் பாதிக்கப்படல், அரச, தனியார்துறைகள் பாதிக்கப்படுதல், நாட்டின் அபிவிருத்தி தடைப்படல்

**குறிப்பு – உரையாடல் வடிவம் பேணப்பட வேண்டும்.**

**ஈ. சிறுகதை**
**மாதிரித் தலைப்புகள்** - தாய் சொல்லைத் தட்டாதே
பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு

- சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல் வேண்டும்
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கு அமைய கற்பனைச் செறிவுடன் எழுதுதல்
- கதையை சுவைபடவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தமாகவும் நகர்த்திச் செல்லுதல்
- கதைக்குப் பொருத்தமான மொழிநடையைக் கையாளுதல்
- படிப்பினையை மறைமுகமாக முன்வைத்தல்
- பொருத்தமான முடிவு

**3. சுருக்கம்**

உள்ளடக்கம் - 06 புள்ளிகள்
சொல்லளவு - 02 புள்ளிகள்
மொழிநடை - 02 புள்ளிகள்

- பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் சொல்லாக பண்பாடு காணப்படுகிறது
- இதற்கு பல்வேறு அறிஞர்களும் வரைவிலக்கணம் கூறியுள்ளனர்
- உலகப் பார்வையோடு, பெறுமானம், நெறிமுறை பொருட்களோடு தொடர்புபடுவது
- பண்பாட்டில் பல்வேறு கூறுகள் காணப்படுகின்றது
- பண்பாட்டின் சிறப்பை அறிந்து ஒழுக வேண்டியது கடமையாகும்

**4. கிரகித்தல்**

1. அறம்
2. அரசு என்னும் நிறுவனம்
3. அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல்
4. கட்டிறுக்கமும் செப்பலோசையும் உடையனவாக இருந்தமை
5. தொடர்நிலையில் பத்து பத்துக் குறள்களாக **(5x2=10 புள்ளிகள்)**

**5. புள்ளித்திட்டம்:**

| | |
|---|---|
| அமைப்பு | 5 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | 7 புள்ளிகள் |
| மொழிநடை | 3 புள்ளிகள் |

**கடிதம்** (கடித அமைப்பு பேணப்படல்)

**உற்பத்தி குறைவதற்கான காரணங்கள்**

- விவசாயிகளுக்கு நாட்டமின்மை, கௌரவமின்மை, நிலங்கள் வேறு தேவைக்கு பயன்படுத்தப்படல், போதிய வருமானமின்மை, உரங்களின் விலையேற்றம், நீர்ப்பற்றாக்குறை, சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் குறைந்தமை

**பாதிப்புகள்**

உற்பத்தி குறைவு, உணவுத் தட்டுப்பாடு ஏற்படல், வருமானம் குறைவு, விலையேற்றம், இறக்குமதி அதிகரித்தல்

**ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**

- விவசாய கடன்களை வழங்குதல், மானிய முறையில் உரங்களை வழங்குதல், விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அவர்களை கௌரவித்தல், சந்தைப்படுத்தும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், விவசாயிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

**அல்லது**

**துண்டுப்பிரசுரம்**

- பாதிக்கப்படுவோர் - சிறுவர்கள், முதியோர், கர்ப்பிணிப்பெண்கள்
- பாதகவிளைவுகள் - தோல் நோய்கள், கண்பார்வை பாதிப்பு, அதிக தலைவலி, உடல் வரட்சி, அதிக தாகம், மாரடைப்பு
- பாதுகாப்பு வழிமுறைகள் - அதிக வெயிலில் நடமாடுவதைத் தவிர்த்தல், அதிக நீரருந்துதல், பாதுகாப்பான உடையணிதல், சிறுவர்கள், முதியவர்கள், அதிகளவில் நீரை அருந்தல், கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவ ஆலோசனையைப் பின்பற்றுதல்

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**வினா இல 1**

**சுருக்கமான விடை தருக**

**1.** அ. இரப்பவரின் தட்டு நீட்டப்படும் முன்னர் / தட்டப்படும் ஓசை
ஆ. வரத்தினால் பிறந்தவன்

**2.** அ. பரிபாடல்
ஆ. பக்தி

**3.** அ. விடாப்பிடி
ஆ. சினிமா

**4.** அ. கபிலர்
ஆ. ஏக்க உணர்வு

**5.** அ. உருவகம்
ஆ. செந்தாழம் பூக்கள்

**6.** அ. நன்றாகப் பழகியிருந்தும்/நன்றாக அறிந்திருந்தும்
ஆ. வாலை வளைத்து ஆட்டுதல் / நன்றி தெரிவித்தல்

7. அ. உருவக அணி
   ஆ. கரும்பு
8. அ. ஆந்தை / பக்குல்
   ஆ. இறந்து போதல்
9. அ. பரதனால்
   ஆ. குகன்
10. அ. போப்பையர்
   ஆ. ஒழுக்கம்

**வினா இல 2**

1. அ) பாம்பும் எள்ளும்
   ஆ) பிளந்த நாக்கு , பிண்ணாக்கு

2. அ) பனிக்கூட்டத்தைப் பகலவன் விரட்டி வருதல், கனிக்கூட்டம் அசைந்தாடுதல் கருமுகில்கள் தவழ்ந்து வருதல், கார்கால மாலை வேளை
   ஆ) மனிதன் - சத்தியத்தால் தலைநிமிர்ந்து வாழ்கின்றான்
   அறிஞன் - தற்பெருமை கொள்ளாது பணிவாக வாழ்கின்றான்

3. அ) குளிர்ந்த பொய்கையில் விளையாடும் மகளிரொடு கைகோர்த்து, தழுவு வழித் தழுவி, அசைந்த வழி அசைதல், உயர்ந்த மரத்தின் தாழ்ந்த கிளையில் ஏறி நீரில் குதித்து விளையாடுதல், நீரில் மூழ்கி அடியில் இருக்கும் மணலை எடுத்துக் காட்டுதல்
   ஆ) ஆராய்ந்து பார்க்காத இளமைப் பருவம்

4. அ) காட்சிப்படிமங்கள் மூலம் மட்டுமே மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளைக் காட்ட முடியும் வார்த்தை மூலம் கூறும் போது சினிமா சீரழியும்
   ஆ) பேசும் படம் வேரூன்றி விட்டது. புராணக் கதைகளே படமாக்கப்பட்டன, மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த கதைகள்

5. அ) கதைசொல்லி, அரவிந்தன், மேகலா என்பவர்களின் படைப்புக்களைத் தனித்தனிக் கோவைகளாக அமைத்தமை
   ஆ) தன்னிடமுள்ள சூட்சுமத்தை மெல்லமெல்ல அவிழ்த்து விட்டமை, வேலைகளை இலகுவாக்கியமை

**2) நாவலர் எழுந்தார்**

**அ) தலைமைத்துவம்**

- அறிஞர் சபைக்கு தலைமை தாங்க கூடிய தகுதி
- தமிழ் மக்களின் தலைமைத்துவத்திற்கான வரை தெரிவு செய்யக்கூடிய தகுதி
- கம்பீரமான தோற்றம், வீறுகொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம் - இவற்றை வர்ணிக்க
  கம்பரில்லையே என கூறுதல்.
- ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் என நாவலர் அழைத்தல்.
- பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்லப்படுகின்ற அமைதி சபையில் நிலவியது என சபை நாவலரது செயலால் அடங்கிப்போனமை.
- நாவலர் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் நியாயத்துக்காக வாதிட முற்பட்டபோது நோயை பொருட்படுத்தாமல் வாதிட்டமை.
- நிலைமையை அனுசரித்து பொருத்தமான இடத்தில் வாதங்களை முன்வைக்கும் திறன்.

ஆ.

- செவிவழியாக கேட்ட கதையொன்றை நாடகப்பாணியில் ஆசிரியர் சித்தரித்தமை.
- நாவலருக்கு சுகயீனம் ஏற்பட்டபோதும் வாதம் தடுமாறியபோதும் நாவலர் எழுந்த காட்சியையும் நடந்து சென்ற காட்சியையும் கம்பராமாயண காட்சியுடன் ஒப்பிட்டுக் கூறியமை.
- நாவலரின் ஆளுமைப் பண்பை வெளிப்படுத்த அவர் கூறிய தொடர்களை அழுத்தமாகக் கையாண்டமை.
- அவரது காசநோயை அருணந்திசிவாச்சாரியாரின் வயிற்றுவலியுடன் ஒப்பீட்டுக் கூறியமை.

**அல்லது**

**03. அற்றைத்திங்கள்**

அ.

- தாலாட்டில் அசைந்திருந்த தொட்டில் எல்லாம் இரத்த வெள்ளம்.
- பால்வார்த்த நிலா முகத்தில் பற்றிவிட்ட தீப்பந்தம்.
- ஏலம்பூ வாய் பொசுங்க எரியுது காலப்புனல் சுமக்கும் கண்ணீரை...
- அரலிப்பூ தண்டெடுக்கப்போன அத்தை திரும்பவில்லை.
- மல்லிகைப்பூ செண்டெடுக்கப்பேன மாமன் திரும்பவில்லை.
- பாரிமன்னில்லை. தேரில்லை என்ற நிலை.
- ஈத்திலை குப்பைமேட்டில் மக்கள் ஏறிநின்று உமணர்கள் ஓட்டுகின்ற உப்பு வண்டியை எண்ணிக்கொண்டிருத்தல்.
- புறப்படுகின்றோம் பறம்பே என கபிலர் கூறி பாரி மகளிரை அழைத்துச் சென்றமை.

ஆ.

- அற்றைத்திங்கள் என்ற பாடலை வைத்து ஒரு நாடகத்தை எழுதியமை.
- நவீன யுத்தத்தின் தன்மையுடன் ஒப்பீட்டுக் கூறியமை.
- தாலாட்டு பாடலூடாக போருக்கு முன்னரான நிலையையும் பின்னரான நிலையையும் காட்டியுள்ளமை.
- அணிகளை கையாண்டுள்ளமை.
- எளிமையான மொழிநடையை கையாண்டு எழுதியுள்ளமை.

**3) பேதைமை**

அ.

- தனக்கு கெடுதியானதை கைக்கொண்டு நன்மை தருவனவற்றை கைவிடுதல்.
- தனக்கு பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசைக்கொள்ளுதல்.
- தகாத செயல்களுக்கு வெட்கப்படாமை
- தக்க விடயத்தை ஏற்காதிருத்தல்.
- அன்பு செலுத்தாதிருத்தல்.
- நன்மை தரும் செயல்களை விரும்பாதிருத்தல்.
- ஏழுபிறவியில் அழுந்தக்கூடிய நரக துன்பத்தை ஒரே பிறவியில் அனுபவிப்பர்.
- நிறைவுறாத செயல்களில் ஈடுபடுவார்.
- தன்னை குற்றவாளியாக்க கூடிய செயல்களை செய்வார்.

ஆ.

- பெருஞ்செல்வத்தைப் பெற்றால் அயலவர்கள் நன்மை பெற உறவினர் பசியால் வாடுவர்.
- ஒருபொருளை தனக்கு உடைமையாகப் பெற்றால் பித்துப்பிடித்தவன் மது உண்டதற்கு ஒப்பாக
  காணப்படுவான்.

**அல்லது**

**தத்தைவிடு தூது**

அ.

- பெருமையுடைய கல்வியை பெற்றிருக்கவேண்டும்.
- பெண்கள் கல்வி கற்றிருந்தால் கணவருக்கு நல்ல துணைவியாக இருப்பர்.
- பெண்களின் கல்வியை விரும்பாத வீணான ஆண்கள் பெண்கள் இன்பமடைவதற்கு தடையானவர்கள்.
- பெண்களை கல்வி கற்ற ஆண்களுக்கே திருமணம் செய்துவைக்கவேண்டும்.
- பெண்கள் பெரும் கல்வியால் சிறப்படையவேண்டும்.

ஆ.

- முட்டாள்களுக்கும் பேதைகளுக்கும் மூத்தோருக்கும் எளியோருக்கும் இரத்தினம்போன்ற பெண்களை மணம் செய்து வைப்பது தடுக்கப்படவேண்டும்.
- கல்விகற்ற வாலிபர் ஒருவருக்கே பெண்ணை திருமணம் செய்துவைக்க வேண்டும்.
- பெண்ணின் அருமையை அறியாதவர்களுக்கு திருமணம் செய்து வைக்ககூடாது.
- கொடுமையான புலிவாய்பட்ட மான் போன்ற குணம்படைத்த ஆண்களுக்கு பெண்களை திருமணம் செய்து வைப்பதை மறுக்கின்றமை.
- பெண்களுக்கு தன் கணவனே கண்கண்ட தெய்வம் என அடிமைத்தனம் கொண்டிருந்தமை.
- முன்பின் அறியாதவர்களுக்கு பெண்ணை திருமணம் செய்து வைக்ககூடாது.
- பொம்மை திருமணம்போல பெண்களை நினைத்து அறிவிலிகளுக்கு திருமணம் செய்து வைக்க கூடாது.
- ஆண்களின் குணநலம் பார்க்காது பெண்களை திருமணம் செய்து வைப்பதை தவிர்க்கின்றமை.

**4) நாட்டார்பாடல்கள்**

அ.

- சிவபெருமானிடம் சுயநலமின்றி எல்லோரினதும் நலனுக்காகவும் வேண்டியமை.
- பட்டிபெருக, செல்வம் பெருக, நாடு தழைக்க, மழைபெய்ய கேட்டல்
- உழவுத்தொழில் சிறக்க கேட்டல்
- எல்லோரும் வாழவேண்டுமென வேண்டல்.

ஆ.

- ஆற்றோடு ஆற்று நீர் அலைந்து வருவதுபோலவும் அதன் பிறகே பறவைகள் மேய்ந்து வருவதுபோலவும் சேற்றோடு வெள்ளம் செறிந்து வருவதுபோலவும் செங்கால் நாரைகள் மேய்ந்து வருவதுபோலவும் விரைவாக அருவி வெட்டும் இளைஞர்களை கண்ணூறு, நாவூறு வராமற் காக்கவேண்டும் எனப்பாடல்.
- மட்டுருக்கால் செய்து, மாவிலங்கன் பிடி சீவி இறுக்கிய அருவாள் கொண்டு சிறப்பாக அரிவி வெட்டுதல்.

**6) கிருட்டிணன் தூதுச் சருக்கம்**

அ.

- சமாதானம் பேசிக்கொண்டிருந்த தருமனை மானமில்லாதவன் இவ்வாறு கூறுவதற்கு நான் என்ன செய்வது என கண்ணனிடம் கேட்டல்.
- திரௌபதி துகிலுரியப்பட்ட வேளையில் கோபிக்கவேண்டாம் என தருமன் கூறியதற்கு எமக்கும் எம்குலத்திற்கும் தீராத பெரும் பழியை உண்டாக்கி விட்டாய் என தருமனை நோக்கி கூறுதல்.
- பன்னிரண்டு ஆண்டுகள் காடாண்டு வந்த பின்பும் துரியோதனன் படையை கொல்லுவதற்கு பின்வாங்கி நிற்கின்றாய் என கோபத்துடன் கூறல்.
- துரியோதனனை போரில் கொன்று நாட்டைப்பெற்று தருவதற்கு அவன் உன்னை வெறாத வகையில் அமராவதி நகரை துரியோதனனுக்கு வழங்குவேன் என கூறியமை.
- திரௌபதியுடைய சபதமும் தம்பியர்கள் நால்வர் எடுத்த சபதம் அனைத்தையும் முடித்துவிட்டாய், பழியின்றி புகழ்பெற்று வாழவே விரும்புகின்றாய் என தருமனைநோக்கி கோபத்துடன் கூறல்.

ஆ.

- இறைவனே என விளித்தல்
- ஊலகமெல்லாம் கொப்பூளினின்று உண்டாக்கியவன்
- கௌத்துவம் எனும் மணியை அணிந்தவன்
- அடியவர்களின் குறைகளை நீக்கியவர்
- சிவனின் யாசிக்கும் தொழிலை நீக்கியவன்
- துளசி மாலையை அணிந்தவன்
- வேதங்களின் பொருளாக தேடும் பெருமையுடையவன்
- தேவர்கள், முனிவர்கள் கண்டுகொள்ள முடியாத பாதம் உடையவர்
- சிவந்த பாதங்களையுடையவன்

7) **தற்கால கவிதைகள்**

அ.

- போற்றும் இரங்கல் புகழ்மொழி, கல்லறை, இறந்தவர்க்கு நினைவு கூறும் நாள், உண்மையான உளங்கசிந்த அன்பு, கானப்பூவை பறித்துப்போட வேண்டும்.

ஆ.

- அப்பனின் சிதைமேல் ஏறிநின்று வேலை செய்யும்நிலை.
- இறந்தவர்களை புதைக்க தனியிடம் இன்மை
- கல்லறை எழுப்பாமை
- தாம் இறந்த பின்னும் தன்னுடலை அம்மண்ணுக்கே உரமாக்குதல்.
- ஏழையாக பிறந்து ஏழையாகவே மடிதல்
- என்னே இறைவன் என இறைவனை நொந்துக்கொள்ளல்.